FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8323723

1. District : மாவட்டம் **Tenkasi** PS: காவல்நிலையம் **Vigilance and Anti Corruption** Year: ஆண்டு **2026** FIR No.: முத.அ. எண் **12/2026** Date: நாள் **11.09.2026**

2. (i) Act சட்டம்: **PC Act, 1988 as amended in Act 16 of 2018.** Sections பிரிவுகள்: **7**

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் **10.09.2026 11.00 hrs** Date to : நாள் வரை

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் **11.09.2026** Time : நேரம் **07.30 hrs**

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் **11.09.2026** Time : நேரம் **07.30 hrs**

4. Type of Information : Written/ Oral / Electronic form : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் **Written**

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் **Kadayanallur. 15 Km North**

Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் **G.KARUPPASAMY** (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் **Tr.GANAPATHY**

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு **26.06.1983** (d) Nationality : நாட்டினம் **INDIAN** (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் **COOLIE** (g) Address : முகவரி **51 MITTA OFFICE STREET, KRISHNAPURAM, KADAYANALLURTALUK, TENKASI DISTRICT.**

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

A.O-1 Tr.Mariraj, Surveyor, Kadayanallur Municipal Office, Tenkasi District.
A.O- 2, Tr.Jegadeesh (Private Individual).

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

No delay.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Not arise

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கிறேன். இன்று 11.09.2026ம் தேதி காலை 07.30 மணிக்கு தென்காசி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு துணை காவல் கண்காணிப்பார் M.பால் சுதர் ஆகிய நான் நிலைய பொறுப்பில் இருக்கும்போது கடையநல்லூர் தாலுகா கிருஷ்ணாபுரம் கதவு எண்.51, மிட்டா ஆபிஸ் தெருவில் குடியிருந்து வரும் திரு.கணபதி மகன் திரு.கருப்பசாமி என்பவர் என் முன் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று, ரகசிய விசாரணை செய்தும், புகார்தாரர் மற்றும் குற்றம் சாட்டப்பட்ட கடையநல்லூர் நகராட்சி சர்வேயர் திரு.மாரிராஜ் பற்றியும் ரகசிய விசாரணை மேற்கொண்டு அவர்களின் நடத்தைகளை அறிந்து, புகார் மனுவில் ஊழல் தடுப்பு சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருந்த காரணத்தினால் அந்த தகவலை சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு தென்சரக காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு தொலைபேசியின் வாயிலாக தகவல் தெரிவித்து அன்னாரின் அனுமதி பெற்று 11.09.2026-ம் தேதி காலை 08.30 மணிக்கு தென்காசி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.12/2026 u/s 7 of the PC Act 1988 as amended in Act 16 of 2018 என வழக்கு பதிவு செய்தேன். மனுவின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர் G.கருப்பசாமி, வயது 43/2026, த/பெ கணபதி, கதவு எண். 51, மிட்டா ஆபிஸ் தெரு,

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முத.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

G. கருப்பசாமி. 11.9.26

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலின் ஒப்பம்

11/9/2026

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

11.09.2026
20 Hrs

Name: பெயர் M. PAULDURAI HER.
Rank: நிலை .....No. எண் .....
DSP. VOAC, Tenkasi.

கிருஷ்ணாபுரம், கடையநல்லூர். பெறுநர் உயர்திரு.துணை காவல் கண்காணிப்பாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, தென்காசி மாவட்டம். நான் கடையநல்லூர் கிருஷ்ணாபுரத்தில் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். எனது தந்தை பெயரில் மிட்டா ஆபிஸ் தெருவில் 1100 சதுர அடி இடமும், அதில் கதவு எண்.51 கொண்ட சிறிய வீடும் இருந்தது. மேற்படி வீட்டையும், இடத்தையும் எனது தந்தை எனக்கும், எனது தம்பி கல்யாணிக்கும் கடையநல்லூர் சார்பதிவாளர் அலுவலக ஏற்பாடு ஆவண எண்.394/2018-ன் படி எழுதி கொடுத்தார். பின்பு மேற்படி இடத்தை நானும், எனது தம்பியும் பாகப்பிரிவினை ஆவணம் எண்.3316/2021-ன் படி சரிபாதியாக பிரித்துக்கொண்டோம். பின்பு நான் பழைய வீட்டை இடித்துவிட்டு அதில் புதிய வீடு கட்டி அதற்கு தீர்வையும் எனது பெயரில் செலுத்தி வருகிறேன். எனது பெயரில் உள்ள சொத்துக்கு பட்டா கேட்டு விண்ணப்பித்தபோது கூட்டுப்பட்டா வந்தது. பின்பு நான் ஜீன் மாதத்தில் தனிப்பட்டா கேட்டு விண்ணப்பித்தேன். பின்பு கடையநல்லூர் நகராட்சிக்கு சென்று சர்வேயர் திரு.மாரிராஜ் அவர்களை பார்த்தபோது அவர் நான் வந்து பார்த்துக்கொள்கிறேன் என்று சொல்லி அனுப்பிவிட்டார். அதன்பின் சுமார் ஒரு மாதம் கழித்து திரு.ஜெகதீஷ் என்பவர் என்னுடைய வீட்டிற்கு வந்து என்னிடம் சர்வேயர் மாரிராஜ் அனுப்பியதாகவும், இடத்தை பார்வையிட்டு வர சொன்னதாக சொல்லி, இடத்தை பார்வையிட்டு அப்ளிகேசனில் சர்வே எண் தப்பாக உள்ளது, சர்வே எண்.17, 18 காண்பித்து மீண்டும் விண்ணப்பிக்க சொன்னார். அதன்படி நானும் 10.08.2026-ம் தேதி தனிப்பட்டா கேட்டு ஆன்லைனில் மீண்டும் விண்ணப்பித்தேன். 08.09.2026-ம் தேதி காலை சுமார் 10.30 மணியளவில் 6369652418 என்ற நம்பரில் இருந்து திரு.ஜெகதீஷ் எனது செல்போன் 9842876283ல் பேசி வீட்டை சர்வேயர் அளக்க வருகிறார், ஆவணங்களை எடுத்து வைக்க சொன்னார். நானும் வெளியில் வேலையாக இருக்கிறேன், வீட்டிற்கு வந்து தகவல் சொல்கிறேன் என்ற சொல்லிவிட்டு மதியம் சுமார் 12.45 மணியளவில் வீட்டிற்கு வந்தபின்பு ஜெகதீஷிடம் பேசினேன். அதன்பின்பு அன்று மதியம் சுமார் 2 மணியளவில் சர்வேயர் மாரிராஜ் அவர்களும், திரு.ஜெகதீஷும் வீட்டிற்கு வந்து இடத்தை அளந்தார்கள். அதன்பின்பு சர்வேயர் திரு.மாரிராஜ் அவர்கள் என்னிடம் ரூ.10,000/- வேண்டும் என்று கேட்டார். நான் கூலி வேலை செய்கிறேன். அவ்வளவு பணம் இல்லை என்று சொன்னேன். அதற்கு சர்வேயர் நீங்கள் பணம் கொடுத்தால்தான் வரைபடம் தயார் செய்து தாசில்தாருக்கு ரிப்போர்ட் அனுப்பமுடியும் என்று சொல்லிவிட்டு சென்றார்கள். 10.09.2026-ம் தேதி காலை சுமார் 10.30 மணியளவில் திரு.ஜெகதீஷ் என்னுடைய செல்போனில் பேசி சார் கேட்ட பணம் ரெடியாகி விட்டதா, ஆவணங்களையும் பணத்தையும் எடுத்துக் கொண்டு கடையநல்லூர் தாலுகா அலுவலகத்திற்கு

வரச்சொன்னார். நான் ஆவணங்களின் நகல் எடுத்துக்கொண்டு கடையநல்லூர் தாலுகா அலுவலகத்திற்கு சுமார் 11.00 மணியளவில் சென்று சர்வேயர் திரு.மாரிராஜ் அவர்களை பார்த்தேன். அவர் அங்கு நின்று கொண்டிருந்த ஜெகதீஷை கூப்பிட்டார். ஜெகதீஷ் வந்ததும், சர்வேயர் என்னிடம் ஜெகதீஷிடம் விபரம் சொல்லியிருக்கிறேன் அவரிடம் கேட்டுக்கொள்ளுங்கள் என்று சொன்னார். ஜெகதீஷ் என்னிடம் சார் சொன்ன பத்தாயிரம் கொண்டு வந்திருக்கிறீர்களா என்று கேட்டார். நான் பணம் கொண்டு வரவில்லை கொஞ்சம் குறைத்துக் கொள்ளுங்கள் என்று கேட்டேன். அதற்கு ஜெகதீஷ் ரூ.5,000/- சொல்லி, கடைசியாக ரூ.4,000/- கொடுங்கள் சாரிடம் சொல்லிக் கொள்கிறேன் என்று சொன்னார். நான் சர்வேயர் மாரிராஜ் அவர்களை பார்த்து ரூ.4,000/- கேட்கிறார் என்று சொன்னதற்கு, அவர் ஜெகதீஷ் சொல்ற பணத்தை கொடுத்து விடுங்கள் என்று சொன்னார். நானும் வேறு வழியில்லாமல் சரி என்று சொல்லிவிட்டு, பணத்தை நாளைக்கு கொடுக்கிறேன் என்று சொன்னதும், சர்வேயர் ஆவணத்தை ஜெகதீஷிடம் கொடுத்துவிட்டு செல்லுங்கள் என்று சொன்னார். நான் ஆவணங்களின் நகல்களை ஜெகதீஷிடம் கொடுத்து விட்டு வந்துவிட்டேன். என்னிடம் எனது சொத்துக்கு தனிப்பட்டா வழங்க பரிந்துரை செய்வதற்கு லஞ்சமாக ரூ.4,00ℑ/- கேட்கும் சர்வேயர் திரு.மாரிராஜ் மற்றும் திரு.ஜெகதீஷ் மீது தக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, (ஒம்.கருப்பசாமி) 11.09.26.

Sir, Received the complaint on 11.09.2026 at 07.30 hrs, conducted confidential enquiry and obtained oral permission from Superintendent of Police, Southern Range, DVAC, Chennai and I registered a case in Tenkasi V&AC Cr.No.12/2026 u/s 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by Act 16 of 2018 on 11.09.2026 at 08.30 hrs. sd.M.Paul Suther, DSP, V&AC, Tenkasi. 11/9/2026.

இந்த வழக்கின் அசல் FIR மற்றும் அசல் புகார் மனு ஆகியவற்றை கனம் முதன்மை மாவட்ட நீதிமன்றம், தென்காசி அவர்களுக்கும், நகலை உயரதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். ஒரு நகலை விசாரணைக்காக நான் எடுத்துக்கொண்டேன்.

11/9/2026

M. PAUL SUTHER.
DSP. V&AC
Tenkasi.